உ

திருச்சிற்றம்பலம்

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க வரலாறு தலதேவாரப் பதிகங்கள்



அன்புடன் வழங்குதல்

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள்

அப்பர் சுவாமி

ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் மடாலயம்

40/1 சபாநாயகர் தெரு,

சிதம்பரம்–608 001.

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளியது

உ

திருச்சிற்றம்பலம்

பன்னிரு ஜோதிர்லிங்க துதி

ஸௌராஷ்ட்ரே ஸோமநாதம்ச
ஸ்ரீ சைலே மல்லிகார்ஜுனம்
உஜ்ஜயின்யாம் மகாகாஷம்
ஓங்காரம் அமலேச்வரம்

பைரவம் வைத்யநாதம்ச
டாகின்யாம் பிமசங்கரம்
ஸேதுபந்தேது ராமேசம்
நாகேசம் தாருகாவனே

வாரணஸ்யாம் துவிச்வேசம்
த்ரயம்பகம் கௌதமீதடே
ஹிமாலயே துகேதாரம்
குஸீமேசம் சசிவாலயே

ஏதாநி ஜ்யோதிர் லிங்காணி
ஸாயம் ப்ராத: படேந்நர:
ஸப்த ஜன்ம க்ருதம் பாபம்
ஸ்மரணேன விமுச்யதி

உ

திருச்சிற்றம்பலம்


திருக்கயிலாய பரம்பரை என்னும் ஸ்ரீகந்தபரம்பரை

சூரியனார்கோயில் ஆதீனம் 27 ஆவது

குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்

பொன்னடிகளுக்கு அடியேன் வணக்கம்.



சூரியனார்கோயில் ஆதீனக்குரு மரபு வாழ்த்து

சீர்மேவு கயிலாய பரம்பரையில் சிவஞான சித்தி காட்டும்
ஏர்மேவு வாமமுனி சந்ததிக்கோர் இளஞான பானுவாகிப்
பார்மேவு பரிதிபுரி வாழ் சிவாக்கிர குருவாம் பரமதேவன்
தார்மேவு கந்தகுழி திருமரபு நீடூழி தழைகமாதோ.

சூரியனார்கோயில் ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ சிவாக்கிர தேசிகமாலை

வானே அவ் வானின் வளர்மதி யேமலர்க் கற்பகமே
கோனே குவலய மாநிதி யேஎனது ஆருயிர்க்கோ
மானே மதிக்கும் மணிவிளக் கேவர மாமணியே
தேனே கரும்பின் சுவையே சிவாக்கிர தேசிகனே —

கல்லாதநெஞ்சன் முழுமூடன் பொய்யன் கடும் சினத்தன்
பொல்லாத பாவி என நீ வெறுத்திடில் போவது எங்கே
பல்லா யிரமுறை பல்லாண்டு கூறும் பலவடிமை
செல்வா பரிதிபுரிவாழ் சிவாக்கிர தேசிகனே—

முப்பொருள் உண்மை நிலையினை மூதருள் கொள்கையினை
மெய்ப்பொருள் ஆகும் சிவனார் உயிர்க்குஅருள்
மேன்மையினை

இப்புவி வாழும் அதிபரி பாகர்க்கு இயையும் முறை
செப்பிடு ஞானப் பெருக்கே சிவாக்கிர தேசிகனே—

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

(தாயுமானவர்)

பிறப்பறுக்கும் பிஞ்ஞகனாக விளங்கும்பெருமானை மனம் மொழி மெய்களால் வழிபாடாற்றி உய்தி பெற வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும் மனத்தால் நினைத்தும் மொழியால் அவன் புகழைப்பாடியும் மெய்யால் அவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தலும் வழிபாட்டு முறைகளாகும். அங்கு இங்கு எனாதபடி விளங்கும் பெருமான் திருக்கோயில்களில் ஆன்மாக்களுக்கு அருள்புரிய ஏன எளிவந்தபிரானாக எழுந்தருளியுள்ளான் அப்பெருமான் உறையும் பதிகள் பலவற்றைத் தொகுப்புத் தலங்களாகக் கூறுவது மரபு அவையாவன அட்டவீரட்டத்தலங்கள், பஞ்சபூதத் தலங்கள், பஞ்சாராண்யத்தலங்கள், சப்தஸ்தானங்கள், சப்தவிடங்கத்தலங்கள், நவக்கோள் தலங்கள், ஜோதிர்லிங்கத் தலங்கள் முதலியன.

இத்திருத்தலங்களில் ஜோதிர்லிங்கத்தலங்களைப் பற்றி அன்பர்கள் அறிந்து வழிபாடாற்ற வேண்டும் என்ற பேர் வாவின் காரணமாக இச்சிறியநூல் திருவருள் கூட்டவெளி வருகிறது. அடியேனையும் ஒருபொருளாக எண்ணி இறையருள் ஸ்ரீசிவக்கிரயோகிகள் அப்பர் சுவாமி என்பார் வழியாக இச்சிறிய நூலைத் தொகுத்துத்தர இட்ட அருளாணை வண்ணம் இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் வெளிவரப் பல அன்பர்கள் பொருளுதவி செய்து ஞான தானத்தின் பெருமையை நிலை நாட்டியுள்ளார்கள் அவர் கட்கெல்லாம் எம்பெருமான் திருவருள் முன்னிற்க வேண்டும் என இறைஞ்சுகிறேன்.

ஜோதிர்லிங்கங்கள் பன்னிரெண்டு இவையாவும் சுயம்பு லிங்கங்கள் அளவிட முடியாத தேஜஸ் ஒளி கொண்டு வேதகாலத்திற்கு முன்பிருந்தே உள்ளவை இத்தகைய மாபெரும் சிறப்பிற்குரிய இந்த லிங்கங்கள் பக்தர்கட்குத் தரிசனம் தந்து இகபர சுகங்களை அளிப்பவையாக விளங்கி வருகின்றன.

இத்திருத்தலங்கள் பன்னிரெண்டையும் அன்பர்கள் மனத்தினால் எண்ணியும் வாயினால் பாடியும், மெய்யால் சென்று வழிபாடாற்றியும் எல்லா நலங்களையும் பெற்று பிறப்பறுக்க வல்லவர்களாக வேண்டும் எனத் தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

23, தேரடிக்கடைத்தெரு
சிதம்பரம்

அடியேன்,
மு. சிதம்பரராசன்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

ஆசியுரை

ஸ்ரீஞானாம்பிகை ஸமேத ஸ்ரீகாளஹஸ்தி நாதர் கிருபையோடும், ஸ்ரீசிவாக்கிர யோகிகள் குருகிருபையோடும், நமது அப்பர் சுவாமி பன்னிரு ஜோதிர்லிங்க ஸ்தல தரிசனம் செய்து, சிவபக்தர்களுக்கும். பொதுஜனங்களுக்கும் ஷடி ஜோதிர்லிங்கங்களின் வரலாறும், தோத்திரங்களும் அமைந்த சிறுநூலாக இதனை வெளியிட்டுள்ளார்கள் இதனை ஞானதானமாக எண்ணி கொடுக்க எடுத்துள்ள முயற்சி நல்ல மேன்மை பெறவேணுமென்றும், இந்நூலை வாங்கும் அன்பர்கள் அனைவரும் அநுதினமும் பனிரெண்டு ஜோதிர்லிங்க துதிகளையும், அம்பாள் துதிகளையும், பக்திப் பரவசமுடன் பாடி, சிவபெருமான் திருவடியினில் பக்தியைப் பெருக்கி அவனது திருவருளுக்கு பாத்திரர்களாகி, இஹபர வாழ்வினில் இன்புற்று நலமுடன் வாழும்படி ஆசீர்வதிக்கின்றோம்.

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்கதேசிக பரமாச்சார்யசுவாமிகள்
(27-வதுபட்டம்)
ஸ்ரீசிவாக்கிரயோகிகள் திருமடாலயம்
சூரியனார் கோவில்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மௌன மடாலயம்
சிதம்பரம்

ஆசியுரை

சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தன் அடியினை மறவாத தவத்திரு. சிவாக்கிரயோகிகள் அப்பர் சுவாமிகள் அவர்கள் பன்னிருஜோதிர்லிங்க வழியாட்டு நூல் வெளியிடுகின்றார்கள்.

சிவநேயச் செல்வர்களும், ஆன்மீகப் பெருமக்களும் அன்பர்களும் ஜோதிர்லிங்க வரலாற்று நூலினைப்பெற்று கற்று இன்புறுவார்களாக.

அன்புடன்
ஸ்ரீ மௌன மடாலயம்
சிதம்பரம்

ஆனைமுக நாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்

ஞானகுரு வாணிபதம் நாடு.

வாழ்த்துரை

சிதம்பரம் பூலோக கயிலாயம். பஞ்சபூத தலங்களில் ஆகாயத்தலம். தெரிசிக்க முக்திதரவல்ல தலம் ஒருதரம் சிவசிதம்பரம் என்று சொல்ல முக்திதர வல்லதும் - கோவில் என சைவர்களால் அன்போடு போற்றும் எத்தனையோ சிறப்புகள் வாய்ந்த தலம். "தீர்த்தமென்பது சிவகங்கையே - மூர்த்தி அம்பலக் கூத்தனதுருவே - ஏத்தரும் தலம் எழிற்புலியூரே"

இத்தகு மேன்மை பெற்ற இத்தலத்தின் தவமியற்றி யோரின் வழி அடிமை போல நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ அப்பர் சுவாமி அவர்கள் முறைப்படி தீட்சையுடன் துறவு பூண்டு ஐந்தாண்டுகளாக தவசீல வாழ்க்கை மேற் கொண்டு வருகின்றார்கள் நல்லொழுக்கமும் சிவபக்தி யும் மிக்க இவர் தினமும் ஆன்மார்த்த சிவ பூஜை செய்து தவறாமல் காலை மாலை நடராஜப் பெருமானை தரிசிக்கும் பேறு பெற்றவர்.

தேவார, திருவாசக. திருமுறைகளைப் பக்தியோடு படித்து வருபவர். அவரது தீட்சையால் ஞான உணர்வு பெற்ற துறவாக அமைய நமது நடராஜப் பெருமான் கருணை புரிவார் என்பது உறுதி. உலகம் உய்ய வேண்டி ஆறுமாத காலம் கடும் விரதத்துடன் நமக்காக பன்னிரு ஜோதிர்லிங்க தலங்களையும் தரிசித்து வந்து இம்மலரையும் நமக்காக வெளியிடு கின்றார்கள்.

G. பரமேஸ்வர தீக்ஷிதர்

ஓம் குமரகுருவே சரணமய்யா!

வாழ்த்துரை

நான்பாடும் பாட்டை நவில்பவர்க்கு நலம் நல்காய் களஞ்பாடு வண்டுறையுங் கழுகுமலை முருகா, என முருகப்பெருமான் ஒருவனையே முழுமுதற்கடவுளாக கொண்டு, 6666 பாடல்களை அவன் பெயராலேயே பாடியருளிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் தவவழி யில். தன்னை ஈடுபடுத்தி. பாம்பனடிகளின் குமார ஸ்தவத்தை நித்தமும் பாராயணம் செய்து, சிவபூஜை ஒன்றையே தன் சிந்தையில் கொண்டு, தமக்கு ஓய்வு கிடைத்த காலங்களில் எல்லாம் சிவாலய தரிசனங்கள் செய்து, பன்னிரு ஜோதிர்லிங்கமும் தரிசனம் செய்து தனது தரிசனத்தின் மகிமையை பலரும் அறியும் வண்ணமாக சிறுநூற்றிரட்டாக வெளியீடு செய்ய உள்ள ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிரகயோகி. தவத்திரு அப்பர் சுவாமிகளுக்கு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமி களின் குருவருளால், மென்மேலும் தவவலிமை பெற்று பாரபோற்றும் தவசிலராக விளங்க எமது பிரார்த்தனையை என்றென்றும் வேண்டி வாழ்த்து கின்றோம். சுப்ரமண்யோம்.

இறையன்புடன்

Dr கு.ந. பசுபதி M.A., B.Ed., H.T.I.M.P.C.H.M

மடாலய அதிபர்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் மடாலயம்

40/1 சபாநாயகர் தெரு சிதம்பரம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய

இராமேஸ்வர தேவாரம்

பண் - பழம்பஞ்சுரம்

திரிதரு மாமணி நாகமாடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக்க எரியேந்தி யாடும் நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்தம் இலங்குகானல் இராமேச் சுரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னி மலர்செயுஞ்செயலே. 1

பொறிகிளர் பரம்பரை யார்த்தயலே புரிவோ டுமைபாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுந்திறமேதெரிந்துணர்வார்
எறிகிளர்வெண்டிரைவந்துபேரும்இராமேச்சுரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மணளர்செயுஞ்செயலே. 2

அலைவளர் தண்புனல்வார்சடைமேல்அடக்கியொருபாகம்
மலைவளர்காதலிபாடஆடி மயக்காவருமாட்சி
இலைவளர்தாழைமுகிழ்விரியும்இராமேச்சுரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. 3

மாதனநேரிழையேர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரிஅங்கையில் ஏந்தியாடுந்திறமேதெரிந்துணர்வார்
ஏதமிலார்தொழுதேத்திவாழ்த்தும்இராமேச் சுரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்
செயுஞ்செயலே. 4

சூலமோ டொண்மழு நின்றிலங்கச் சுடுகா டிடமாகக்
கோலநன் மாதுடன் பாடஆடுங் குணமே குறித்துணர்வார்
ஏலந றும்பொழில் வண்டுபாடும் இராமேச் சரமேய
நீலமார்கண்டமுடையவெங்கள்நிமலர்செயுஞ்செயலே 5

கணைபிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தாம்
இணைபிணைநோக்கிநல்லாளொடாடும்இயல்பினராகிநல்ல
இணைமலர்மேலன்னம்வைகுகானல்இராமேச்சுரமேயார்
அணைபிணைபுல்குகரந்தைசூடும்அடிகள்செயுஞ்செயலே

நீரினார் புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
ஊரினார் துஞ்சிருள்பாடியாடும் உவகைதெரிந்துணர்வார்
ஏரினார்பைம்பொழில்வண்டுபாடும்இராமேச்சுரமேய
காரினார் கொன்றைவெண்டிங்கள்சூடுங்கடவுள்
செயுஞ்செயலே. 7

பொன்திகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்புலித்தோலுடையாக
மின்திகழ்சோதியர்பாடலாடல்மிக்கார்வருமாட்சி
என்றுநல்லோர்கள்பரவியேத்தும்இராமேச்சுரமேயார்
குன்றினலன்றரக்கன்தடந்தோள்அடர்த்தார்கொளுங்
கொள்கையே. 8

கோவலன்நான்முகன்நோக்கொணாதகுழகன் அழகாய
மேவலன்ஒள்ளெரியேந்தியாடும்இமையோர் இறைமெய்ம்மை
ஏவலனார்புகழ்ந்தேத்திவாழ்த்தும்இராமேச்சுரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம்மிறைவர்
செயுஞ்செயலே, 9

பின்னெடுமுன்னிடுதட்டைச்சாத்திப்பிரட்டேதிரிவாரும்
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
இன்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலும்இராமேச்சுரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே 10

தேவியைவவ்வியதென்னிலங்கையரையன்திறல்வாட்டி
ஏவியல்வெஞ்சிலையண்ணல்நண்ணும்இராமேச்சுரத்தாரை
நாவியன்ஞானசம்பந்தன்நல்லமொழியால்நவின்றேத்தும்
பாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே, 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

திருக்கேதாரம் தேவாரம்

பண் — நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே. 1

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால் அறம்உளவே
அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெனீரே 2

கொம்பைப்பிடித் தொருக்காலர்கள் இருக்கால் மலர் தூவி
நம்பன்னமை ஆள்வனென்று நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 3

உழக்கேஉண்டு படைத்திட்டிவைத் திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செயன் மின்
கிழக்கேசரம் இடுவார்தொழு கேதரேமெ னீரே. 4

வாளோடிய தடங்கண்ணியர் வலையில்அழுந் தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாய்உய்ம்மின் அடிகட்கிடம் அதுவேஎனில் இதுவே 5
கீளோடர வசைத்தானிடம் கேதாரமெ னீரே.

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறில் அன்றே
குளியீர்உளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி
தெளியீர்உளம் சீபர்ப்பதந் தெற்குவடக் காகக்
கிளிவாழையொண் கனிகீறிஉண் கேதாரமெ னீரே. 6

பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே.

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை இறுத்துத்
துளைக்கைக்ளிற் றினமாய்நின்று கனைத்நீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயில்மான்பிணை நிலத்தைக்
கிளைக்குமணி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 8

பொதியேசுமந் துழல்வீர்பொதி அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்கடல் இலங்கைக்கிறை மலங்கவரை அடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங் கேதாரமெ னீரே. 9

நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவன் அடியார்களுக் கடியான் அடித்தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை ஊரன்னுரை செய்த
பாவின்தமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

ஸ்ரீ ஸைசலம் தேவாரம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

கன்றினார் புரங்கள் மூன்றுங் கனலெரி யாகச்சீறி
நின்றதோ ருருவந் தன்னால் நீர்மையும் நிறையுங்கொண்டு
ஒன்றியாங் குமையுந் தாமும் ஊர்பலி தேர்ந்து பின்னும்
பன்றிப்பின் வேடராகிப் பருப்பத நோக்கி னாரே. 1

கற்றமா மறைகள் பாடிக் கடைதொறும் பலியுந் தேர்வார்
வற்றலோர் தலைகை யேந்தி வானவர் வணங்கி வாழ்த்த
முற்றவோர் சடையில் நீரை ஏற்றமுக் கண்ணர் தம்மைப்
பற்றினார்க் கருள்கள் செய்து பருப்பத நோக்கி னாரே. 2

கரவிலா மனத்த ராகிக்கைதொழு வார்கட் கென்றும்
இரவுநின் றெரிய தாடி இன்னருள் செய்யும் எந்தை
மருவலார் புரங்கள் மூன்று மாட்டிய வகைய ராகிப்
பரவுவார்க் கருள்கள் செய்து பருப்பத நோக்கி னாரே. 3

கட்டிட்ட தலைகை ஏந்திக் கனலெரி யாடிச் சீறிச்
சுட்டிட்ட சீறு பூசிச் சுடுபிணக் காடராகி
விட்டிட்ட வேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினாரே. 4

கையராய்க் கபால மேந்திக் காமனைக் கண்ணாற் காய்ந்து
மெய்யராய் மேனி தன்மேல் விளங்குவெண் ணீறு பூசி
உய்வரா யுள்கு வார்கட்குவகைகள் பலவுஞ் செய்து
பையரா அரையி லார்த்துப் பருப்பத நோக்கி னாரே. 5

வேடராய் வெய்ய ராகி வேழத்தி னுரிவை போர்த்து
ஓடரா யுலக செல்ல முழிதர்வர் உமையுந் தாமுங்
காடராய்க் கனல்கை யேந்திக் கடியதோர் விடைமேல்
கொண்டு
பாடராய்ப் பூதஞ் சூழப் பருப்பத நோக்கினுரே. 6

மேகம்போல் மிடற்ற ராகி வேழத்தி னுரிவை போர்த்து
ஏகம்பம் மேவி னுர்த ராம் இமையவர் பரவி ஏத்தக்
காகம்பர் கழற ராகிக் கடியதோர் விடையொன் றேறிப்
பாகம்பெண் ணுருவ மானுர் பருப்பத நோக்கி னுரே. 7

பேரிடர்ப் பிணிகள் தீர்க்கும் பிஞ்ஞகன் எந்தை பெம்மான்
காருடைக் கண்ட ராகிக் கபாலமோர் கையி லேந்திச்
சீருடைச் செங்கண் வெள்ளே றேறிய செல்வர் நல்ல
பாரிடம் பாணி செய்யப் பருப்பத நோக்கு னுரே. 8

அங்கண்மா லுடைய ராய ஐவரா லாட்டு ணுநே
உங்கண்மால் தீர வேண்டி லுள்ளத்தால் உள்கி ஏத்துஞ்
செங்கண்மால் பாவி ஏத்திச் சிவனென நின்ற செல்வர்
பைங்கண்வெள் ளேற தேறிப் பருப்பத நோக்கி னுரே. 9

அடல்விடை யூர்தி யாகி அரக்கன்தோள் அடா வூன்றிக்
கடவிடை நஞ்ச முண்ட சுறையபணி கண்டனுர்தாஞ்
சுடர்விடு மேனி தன்மேற் சுண்ணவெண்ணீறு பூசிப்
படர்சடை மதியஞ் சேர்த்திப் பருப்பத நோக்கி னுரே. 10

திருச்சிற்றம்பலம்



திருச்சிற்றம்பலம்

ஜோதிலிங்கம் — 1 — சோமநாதம் (சௌராட்டிரா)

இஃது ஒரு கடற்கரை நகரம். இதன் கடற்கரை மேற்கு இந்தியாவிலுள்ள அழகிய கடற்கரைகளில் ஒன்று இப்பட்டினத்திற்கும் கிழக்கே ஐந்து ஆறுகள் கலக்கின்றன இவற்றுள் இரண்டு ஆறுகள் புலப்படா ஆறுகள் ஆகையால் மூன்று ஆறுகள் கூடுகின்ற இடம் என்ற பொருளில் இப்பகுதி திரிவேணி சங்கமம் எனக் கூறப்படுகின்றது சௌராட்டிரா மாநிலத்தில் வீரவால் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து சோமநாதன் ஆலயம் உள்ள பிரபாச பட்டினம் மூன்று மைல் தொலைவில் உள்ளது

ஜோதிலிங்கம் – 2 – ஸ்ரீசைலம் (ஆந்திரா)

இஃது மல்லிகார்ச்சுனம், ஸ்ரீசைலம் என்றும் அழைக்கப்படும் திருப்பருப்பதம் தெலுங்கு நாட்டிலுள்ள ஜோதிலிங்கத் திருத்தலமாகும் அருச்சுன (மருதமரம்)திருத் தலமானதால் இது மல்லிகார்ச்சுனம் எனப்பெயர் பெற்றது இது கர்நூல் மாவட்டத்தில் நந்தியாலுககு அருகில் உள்ளது. சந்திபீடத் திருத்தலங்களில் இது பிரமராம்பாள் பீடமாகப் போற்றப்படுகிறது கிருஷ்ணு நதிக்குத் தெற்குக்கரையில் உயரமான பல மலைகளுக்கு இடையே 25,000அடி உயரமான தொருமலையின் மேல்கோயில் அமைந்துள்ளது. இது பூலோக கைலாசமாகக் கருதப்படுகிறது. இத்திருத்தலம் சம்பந்தர் அப்பர், சுந்தரம் ஆகிய மூவராலும் பாடல் பெற்றதாகும் (மூன்று பதிகங்கள்)

ஜோதிலிங்கம் — 3 —உஜ்ஜயினி (மகாராட்டிரம்)

இது மகாகாள லிங்கம் எனப்பெறும் மத்தியப்பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள உஜ்ஜயினி வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜோதிலிங்க நகரமாகும் பழையகாலத்தில் அமராவதி அவந்திகை, பத்மாவதி, சிவபுரி, விசாலா என்று வழங்கப் பட்ட நகரம் உஜ்ஜயினி என்றால் ஜைனமதத்தை உச்சநிலைக்கு கொண்டு வந்த பீடம் என்பது பொருளாகும்.

ஜோதிலிங்கம் — 4 — ஓங்காரம் (மகாராட்டிரம்)

இது நர்மதை நதிக்கரையில் அமைந்த ஜோதிலிங்கத் தலமாகும். நர்மதையும் காவிரியும் கலந்து கூடும் இடம் ஓங்காரவடிவமாக அமைந்துள்ளது. மாந்தாதா என்ற மாமன்னன் இங்கிருந்து ஆண்டதால் "மாந்தாதா" என்று பெயர் ஏற்பட்டது, இன்றும் இங்குள்ள மலைக்கு "மாந்தாதா ஆசிரமம் என்பது பெயராகும்.

ஜோதிலிங்கம் — 5 — வைத்தியநாதம் (மத்தியப்பிரதேசம்)

இத்திருத்தலம் எது என்பதில் இருவேறு பட்ட கருத்துகள் உள்ளன. பீகார் மாநிலத்தில் உள்ள சீதா பூமியிலுள்ள வைத்தியநாதனே ஜோதிலிங்கங்களுள் ஒன்று மற்றொரு வைத்திய நாதத்தலம் "ஜெசிடி" என்னும் நிலயத்திலிருந்து 4கல் தொலைவில் உள்ளது. இது பாலி எனவும் வழங்கப்பெறும் ஸ்ரீசைல நாதலிங்கம் என்பது இறைவன் பெயர் இலங்கையிலிருந்து இராவணனால் எடுத்து வரப்பட்ட சிவலிங்கம்.

ஜோதிலிங்கம் — 6 — பீமசங்கரம் (மகாராட்டிரம்)

இது மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது. பூனாவிலிருந்து 57 கல் தொலைவிலும் பம்பாயிலிருந்து 62 கல் தொலைவிலும் உள்ளது மாஞ்ஜர் என்ற நகருக்குச் சென்று மலையில் ஏறி இத்தலத்தை அடையலாம் பீமசங்கரர் என்பது இறைவனின் பெயர் பீமாநதி என்பது இங்குள்ள புண்ணிய தீர்த்தமாகும்.

ஜோதிலிங்கம் — 7 — இராமேஸ்வரம் (தமிழ்நாடு)

இது வங்காளவிரிகுடாக்கடலில் உள்ள ஒரு சிறிய தீவு இங்குள்ள தனுஷ்கோடி தென்கோடி மும்முனைகளுள் ஒன்று இது தீர்த்தச் சிறப்புடையது காசியில் நீராடியவர் இராமேஸ்வரத்தில் நீராடினால்தான் புண்ணியம் என்பர். இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் இறைவன் இராமநாதர்

இறைவி மலைவளர் காதலி இத்திருத்தலத்தை சம்பந்தர் இருபதிகங்களிலும் அப்பர் ஒருபதிகத்திலும் பாடியருளி யுள்ளார். இராவணனைக்கொன்ற பழி தீர இராமன் சிவலிங்க பிரதிட்டை செய்து வழிபட்டமையால் இது இராமேஸ்வரம் எனப்பெயர் பெற்றது

ஜோதிலிங்கம் — 8 — நாகேசம் (மகாராட்டிரம்)

இது தாருகாவனம் என மறுபெயர் பெற்றதலம் சோண்டி புகைவண்டி நிலையத்திலிருந்து 14 கல் தொலைவில் உள்ளது. தாருகையும் தாருகனும் தங்கி வழிபட்ட தலமாதலின் "தாருகாவனம்" எனப் பெயர் பெற்றது. இக் கோயிலில் உள்ள பெருமான் நாகேஸ்வரர் எழுந்தருளியுள்ள ஊர் அவுண்டா என வழங்கப்படுகிறது. நாகேஸ்வரர் அல்லது நாகநாதர் என்ற சிவலிங்கம் தெற்கு முகமாகத் திரும்பியிருக்கிறது அதாவது பாணமிருக்கும் பீடத்திலுள்ள கோமுகம் கிழக்கு நோக்கியுள்ளது. கிழக்கு நோக்கியிருக்கும் கோமுகத்தோடு கூடிய சிவலிங்கத்தை வேறு எங்கும் காண்பது அரிது

ஜோதிலிங்கம் — 9 — காசி (உத்திரபிரதேசம்)

சுவாமி விஸ்வநாதர் எழுந்தருளியிருப்பதால் இது விஸ்வேசம் எனவும் பெயர் பெறும் கருமங்களை நாசம் செய்வதாலும் சிவஞானத்தலே பிரகாசமடையச் செய்வதாலும் இத்தலத்திற்கு "காசி" எனப்பெயர் வந்தது வாரணுசி என்ற ஆறுகளின் சுனப்பிற்கு இடையில் அமைந்ததால் "வாரணுசி" எனவும் அழைக்கப்பெறும் இப்பதி ஈசனுல் எந்நாளும் விடப்படாமல் இருத்தலின் "அவிமுக்தம் ஆனந்தவனம் மகாச்சமானம் எனவும் காரணப்பெயர் களைப் பெற்றுத் திகழ்கிறது காசி இறக்க முக்திதரும்தலம் இது தேவார வைப்புத்தலமாகும். இறைவித் திருநாமம் விசாலாட்சி.

ஜோதிலிங்கம் — 10 — திரியம்பகம் (மகாராட்டிரம்)

இது நாசிக்கிலிருந்து தென்கிழக்கில் 18 கல் தொலைவில் உள்ளது. பாணகங்கை நதி திரியம்பகத்தின் கிழக்கு எல்லை பிரம்மகிரி என்ற மலையைச்சார்ந்த சிற்றூர் இத்தலம். இப்பதி கோதாவரி ஆறு மலையிலிருந்து விழும் இடத்தில் உள்ளது இதற்குத் "திரிசந்திய கேந்திரம்" என்றபெயரும் உண்டு சிவபெருமான் இங்கு மலை உருவில் உள்ளார்

ஜோதிலிங்கம் — 11 கேதாரம் (உத்திரபிரதேசம்) ஹிமாலயம்-வரிமாலயம்

இது இமயமலையிலுள்ள திருத்தலம் ரிஷிகேசத்திலிருந்து சாலைவழியாகவும் நடந்து மலைமேல் ஏறியும் இத்தலத்திற்குச் செல்லவேண்டும். பனியால் மூடப்பட்டிருக்கும் ஆறுமாத காலபூஜை தேவ பூஜை நடைபெறுகிறது எனவும் மற்ற ஆறுமாத காலபூஜை மனித பூஜை நடைபெறுகிறது எனவும கூறுவர். பிருங்கி முனிவரின் பொருட்டு உமையம்மை இறைவன் கேதாரேஸ்வரர் இறைவி கேதாரகௌரி சம்பந்தரும் சுந்தரரும் இத்தலத்தைப் பாடிப் பரவியுள்ளனர்.

ஜோதிலிங்கம் — 12 — குஸ்மேஸம் (மகாராட்டிரம்)

ஹைதராபாத் மாநிலந்தில் உள்ள இத்தலத்திற்கு ஔரங்காபாத்தில் இறங்கிச்செல்லவேண்டும். இறைவன் திருப்பெயர் குஸ்மேஸ்வரர் சிவலிங்கம் சிவந்த நிறத்துடன் விளங்குகிறது. இது பார்வதி குங்குமப் பூவால் வழிபட்ட தலம் குஸ்மை என்ற பெண்ணின் பெயரால் குஸ்மேஸ்வரர் என அழைக்கப்படுகிறுன் 'கிருஷ்ண' என்ற மகாராட்டிர சொல்லிற்கு குங்குமப்பூ என்பது பொருள். எனவே இவ்விறைவன் கிருஷ்ணேஸ்வரர் எனவும் அழைக்கப் படுகிறுர்.

ஜோதிர்லிங்க அம்பாள் துதி

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி
    புராந்தகி, த்ரயம்பகி, எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, ஸஹஸ்ரதள
    புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
    நாதாந்த சக்திஎன்றுன்
நாமமே உச்சரித் திடும் அடியர் நாமமே
    நான்உச்ச ரிக்கவசமோ?
ஆர் அணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
    அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே! பின்னையும் கன்னிஎன மறைபேசும்
    ஆனந்த ரூபமயிலே!
வார் அணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
    வளம்மருவு தேவை அரசே!
வரைராஜ னுக்குஇருகண் மணியாய் உதித்தமலை
    வளர்காத லிப்பெண் உமையே!

திருச்சிற்றம்பலம்

நன்றியுரை

எழுத்தறிவித்தவன் இறைவனாகுமே

சமயதீட்சை செய்துவைத்தவர்

மஹான் சொர்ணேஸ்வர குருக்கள்

(கூத்தம்பூண்டி, தாராபுரம் அருகில்)

விசேஷதீட்சை செய்தவர்

காசி. வைத்தியநாத சிவாச்சாரியார்

அப்பனி நகர், 57 முனிசிபல் காலனி ஈரோடு-4

1995-ம் வருஷம் பனிரெண்டு சோதிர்லிங்க சிவத்தல யாத்திரை சென்றுவரவும், 1996-ம் வருஷம் கோகரண தலயாத்திரை சென்றுவரவும், 1997-வருஷம் நேபானம் பசுபதிநாதர் தரிசனம்செய்ய ரூபாய் கொடுத்தபேரன்பர் களுக்கும் தலயாத்திரை செய்ய திருப்போரூர் தவத்திரு சிதம்பரம் சிவஞானசுவாமி அவர்களை தரிசித்து அவருடைய ஆசிபெற்றும் பணம் கொடுத்து வழியனுப்பிவைத்த குருமகாசந்நிதானத்துக்கும் வணக்கமும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீமத் பாம்பன்சுவாமிகள் கோயில் திருப்பரங்குன்றம் ஸ்ரீராமச்சந்திர சுவாமிகளை தரிசித்து நூல் வெளியிட மனமுவந்து கேட்டரூபாய் கொடுத்து ஆசீர்வாதம் செய்தார்கள். 11-3-97 முதல் 27-3-97 முடிய புதுடில்லியில் ஆர்.கே.புரம் மலைமந்திரில் தங்கியிருந்தேன் நிர்வாகஸ்தர்களும் அர்ச்சகர்களும் ஆலயப்பணியாளர்களும் பக்தர்களும் 17-நாட்களுக்கு தங்குமிடமும் மூன்று வேளையுணவும் செலவுக்குப்பணமும் புதுடில்லியிலிருந்து சென்னைக்கு டிக்கட் எடுத்துக் கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள் அவர்கள் அனைவர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். புத்தக வெளியீடு நிதி உதவும் பேரன்ப -க்கு நன்றி வணக்கம்.

தங்கள்,

அப்பர்சுவாமி

ஸ்ரீ சாயி இராமகிருஷ்ண பிரஸ், சிதம்பரம்